(4) கவன ஈர்ப்புகள்

(அ) திருவில்லிபுத்தூர் கூட்டுறவுப் பண்டகசாலையின் செயல்முறை குறித்து.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே,

''முகவை மாவட்டம் திருவில்லிபுத்தூர் தொகுதியிலுள்ள திருவில்லிபுத்தூர் கூட்டுறவு பண்டகசாலை செயல்படாமலும் வேலை இல்லாமலும் பண்டகசாலை உறுப்பினர்களின் முதலுக்கும் ஆபத்தான சூழ்நிலையில் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து ஒரு அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவரவர்களே, 2,317 உறுப்பினர்களைக் கொண்டு திருவல்லிபுத்தூர் கூட்டுறவு பண்டகசாலை செயல்பட்டு வருகிறது. மொத்தம் செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 36,065-ல் அரசின் மூலதனம் ரூபாய் 17,800 ஆகும். கடந்த எட்டு ஆண்டுகளில் இப் பண்டகசாலையின் விற்பனை பலன்களின் விவரம் வருமாறு :—

ஆண்டு.	ஆதாயம்.	நட்டம்.	தொடர் நட்டம்.
	ரூ. பை.	ரூ. பை.	ரூ. பை.
1970—71	..	25,148.87	1,15,756.88
1971—72	..	53,627.19	1,69,384.07
1972—73	..	95,652.82	2,65,036.89
1973—74	..	26,681.70	2,91,718.59
1974—75	..	27,506.07	3,19,224.66
1975—76	46,234.24	..	2,72,990.42
1976—77	..	40,131.63	3,13,122.05
1977—87	..	62,423.33	3,75,545.83

1977—78 ஆம் கூட்டுறவு ஆண்டில் இப்பண்டகசாலை ரூபாய் 13,26,316-க்கு விற்பனை செய்தது. 1—7—1978 முதல் 31—1—1979 முடிய இப்பண்டகசாலை ரூபாய் 5,08,564-க்கு விற்பனை செய்துள்ளது. விற்பனை சரிவுக்கு

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

முக்கிய காரணம் சர்க்கரை, மற்றும் இதர கட்டுப்பாட்டு சாமான்கள் விற்பனையாகாதது. இந்த பண்டகசாலையின் வியாபாரத்தை அபிவிருத்தி செய்யவும், ஒரு 'மக்கள் அங்காடி' திறக்கவும் இதற்கு அரசு ரூபாய் 14,000 நிதியுதவி அளித்துள்ளது. மத்திய அரசின் உதவியைப் பெறும் பணிகளின் கீழ் உதவி பெற இப்பண்டகசாலைக்கு புனரமைப்புத் திட்டம் ஒன்றைத் தயாரித்து அனுப்பும்படி இராமநாதபுரம் சரக இணைப் பதிவாளர் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார். ஆகவே, புதிப்பிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

* திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, இந்தச் சங்கத்தைப் புதுப்பிப்பதற்காக அரசு எடுத்துக்கொண்ட முயற்சிக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த திருவில்லிபுத்தூர் பண்டகசாலை பலவிதமான பலகீனங்களைக் கொண்டதாக இப்போது இருக்கிறது. அதிகாரிகளும் டைரக்டர்களும் சரியாக இயங்கவில்லை. வாங்கிய கடன்களைத் திருப்பிக் கட்டாத நிலைமையினால் அதை நடத்த முடியாத நிலமை ஏற்பட்டிருக்கிறது. ஒவ்வொரு அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களும் அதிலே இருக்கிறார்கள், சீனி வினியோகத்திலே முறைகேடு நடந்திருக்கிறது. அதைப்பற்றி விசாரணை நடைபெற்றிருக்கிறது. தனியார்களுக்கு டெண்டர்களே இல்லாமல் விட்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட குறைபாடுகளைக் களைய அரசு துரிதமாக என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறையின் அவசர நடவடிக்கைகள் மூலமாக தனிப் புனர் விசாரணை, கூட்டுறவுச் சட்டத்தின் 65 வது பிரிவின்படி விசாரணை செய்ய உத்திரவிடப்பட்டு அந்தக் கூட்டுறவுப் பண்டகசாலையைக் கலைக்காமல் குறைபாடுகளைக் களைந்து அதைச் சீர்திருத்துவதற்காக ஆவன செய்யப்பட்டு வருகிறது, குறைபாடுகளைப் போக்கவேண்டுமென்ற முறையிலே தான் அரசு தக்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

(5) ஒழுங்குப் பிரச்சனைகள்.

(அ) உறுப்பினர் தம் பேச்சுக்கு ஆதாரம் கொடுப்பது குறித்து.

திரு. தாழை மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, நேற்றைய தினம் மாண்புமிகு உறுப்பினர் பாலா பழனூர் தாழ்த்தப்பட்ட மக்களைப்பற்றி பாராளுமன்றத்தில் பேசிய ஒரு கருத்

அந்தப் பத்திரிகையில் வெளி வந்திருப்பதையும், பாராளுமன்ற நடவடிக்கைக் குறிப்புகளில் அப்படித்தான் இருக்கிறதா என்பதைப்பற்றியும், எந்தப் பத்திரிகையில் போடப்பட்டிருக்கிறதோ அந்தப் பத்திரிகையின் ஆசிரியரைக் கூப்பிட்டு அவர் உறுதி தந்த பிறகு, அதை நான் ஏற்றுக் கொண்டு பிறகுதான் தீர்ப்பு கூறவேண்டும். இதை நேற்று அவர் என்னிடத்தில் தரவில்லை. நேற்று அலை ஓசை பத்திரிக்கையைத் தந்தார்கள். ஒன்றரை மணிக்குள் தர வேண்டுமென்று துணைத் தலைவரவர்கள் சொன்னதற்கேற்ப அலை ஓசையைக் கொண்டு வந்து காட்டினார்கள். மீதிப் பத்திரிகைகளில் வந்திருக்கிறதா என்று காட்ட அவரால் அப்பொழுது இயலவில்லை. (குறுக்கீடு) இன்றைக்குக் கொடுப்பதைப் பற்றிப் பேச்சு இல்லை. தீர்ப்புக் கூறுவதற்கு முன்னால், ஒன்றரை மணிக்குள் இந்த ஆதாரங்களை என்னிடத்தில் தரவில்லை. அதுபற்றித் தீர்ப்புக் கூறியாகிவிட்டது. மேலும் இப்படிப் பிரச்னை எழுப்புவதாக இருந்தால், எழுத்து மூலமாகத் தந்து, நான் அந்தப் பத்திரிகையையோ அல்லது பாராளுமன்ற குறிப்புகளையோ வரவழைத்து அது உண்மை என்று கருதினால் தீர்ப்பை மறுபரிசீலனை செய்து அதற்கு நடவடிக்கை எடுக்க முடியும். இப்பொழுது தீர்ப்பு கொடுத்தாகி விட்டது. மேலும் ஏதாவது இருந்தால் எழுத்து மூலமாக எழுதித் தந்தால் அதன்மீது ஆய்ந்து தீர்ப்பு கூற வழியிருக்கிறது.

4. கவன ஈர்ப்புகள்—தொடர்ச்சி.

(அ) திருவில்லிபுத்தூர் கூட்டுறவு பண்டகசாலையின் செயல் முறை குறித்து—தொடர்ச்சி.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவரவர்களே, கூட்டுறவு பண்டக சாலைகளுக்குப் பலசரக்கு, ஜவுளி ஆகியவற்றைத் தனிப்பட்ட முதலாளிகளிடம் கொள்முதல் செய்து கமிஷன் வாங்குவதாகத் தெரிகிறது. மேலும் கூட்டுறவு பண்டக சாலைகளில் விற்கும் விலைக்கும் தனியார் கடைகளில் விற்கும் விலைக்கும் வித்தியாசம் அதிகமாக இருக்கிறது. இதை மூடப்படக் கூடிய நிலைமைகள் இருக்கின்றன. இதையெல்லாம் போக்கி, ஒன்பதாண்டுக் காலமாகச் செயல்படாத சங்கத்தின்மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, சங்க உறுப்பினர்களின் முதலுக்கு பாதுகாப்பு இருக்கிறதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய ஆலோசனையைப் பரிசீலனை செய்து நடவடிக்கை அவசியம் எடுக்கப்படும்.

திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன் : தலைவரவர்களே, எதிர்க்கட்சித் தலைவரவர்கள் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் பாராளு மன்றக் குழுவின் தலைவர் திரு. பாலா பழனூர் பேசியதாக இங்கே குறிப்பைக் காண்பித்தார்கள். இந்தச் செய்திகளைக் குறித்து அண்ணா நாளிதழில் கண்டனம் தெரிவித்து அறிக்கை கொடுத்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) டெல்லி மாநகரில் மோட்டார் வண்டிகளின் இலக்கப் பலகைகள் இந்தி மொழியில் எழுதப்பெறுவது குறித்து—

திரு. பி. எச். பாண்டியன் : தலைவரவர்களே, சென்ற மாதம் 23 ஆம் தேதி இன்டியன் எக்ஸ்பிரஸ் நாளிதழில் ஒரு நியூஸ் அயிட்டம் வந்தது. அதன் அடிப்படையில் 41 வது விதியின்கீழ் இந்தத் தீர்மானத்தைக்கொண்டு வருகிறேன்.

The Delhi Administration is understood to have asked the traffic police not to prosecute vehicles bearing the number plates in Devanagari (Hindi) script as an amendment to the Motor Vehicles Act clarifying the position is being introduced in parliament.

The request was made during some informal discussions in June-July last year as it was discoverd that some of the top elected officials of the Delhi Administration had number plates in Devanagiri script on their vehicls in violation of the existing Motor Vehicles Act.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முதலிலே என்ன எழுதிக் கொடுத்தீர்களோ அதை மட்டும் படித்துவிட்டு உட்காருங்கள்.

திரு. பி. எச். பாண்டியன் : உங்களிடம் காட்டிவிட்டுத்தான்........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் முதலிலே பதில் சொல்லட்டும். என்ன எழுதிக் கொடுத்தீர்களோ அதை மட்டும் படியுங்கள்.

திரு. பி. எச். பாண்டியன் : தலைவரவர்களே, 41 வது விதியின் கீழ் கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

"மோட்டார் வண்டிகள் சட்டத்தின் விதித்துறைகளுக்குப் புறம்பாக டெல்லி மாநகரில் உள்ள மோட்டார் வண்டிகளின் இலக்கப் பலகைகள் இந்தி மொழியில் அமைந்துள்ளதன் காரணமாகப் பொதுமக்களிடையே ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து".